# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்*

---

*(2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2017, யூலை மாதம் 28 ஆம் திகதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம்**

[2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 21/2016.

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 28(அ) எனும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 28 ஆம் பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 28(அ) என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"பாய்ச்சு பக்குரு வலைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் படும் மீன்பிடிச் செயற்பாடு களைத் தடைசெய்தல்.

28அ.(1)(அ) மோட்டார் மயப்படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்படவேண்டிய இரண்டு சிறகுகளுடன் அல்லது இரண்டு சிறகு களுமற்ற அல்லது அவ்வலைகளின் இரண்டு சுயாதீன முனைகளிலும் செங்குத்துக் கம்பங்களைப் பயன்படுத்தும் பாய்ச்சு பக்குரு வலைகள் உட்பட அவ்வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிச் செயற்பாடுகளில் ஆளெவரும் ஈடுபடுதலோ அல்லது வேறு எவரேனும் ஆளை ஈடுபடுத்தல் செய்வித்தலோ ஆகாது.

(ஆ) இலங்கை நீர்ப்பரப்புகளில் மீன்பிடி செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக மோட்டார் மயப்படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளத்தினால் கட்டி

2-PL 005210 -961 (2017/05)

இழுக்கப்பட வேண்டிய ஏதேனும் பாய்ச்சு பக்குரு வலையினை ஆளெவரும் பயன்படுத்துதலோ, சொந்தமாக வைத்திருத்தலோ, இறக்குமதி செய்தலோ, ஏற்றி இறக்குதலோ, கொள்வனவு செய்தலோ அல்லது விற்பனை செய்தலோ ஆகாது.

(2) இலங்கை நீர்ப்பரப்புக்களில் மோட்டார் மயப் படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளம் ஒன்றினால் கட்டி இழுக்கப்பட வேண்டிய பாய்ச்சு பக்குரு வலையினால் நிறை வேற்றப்பட வேண்டிய மீன்பிடி செயற்பாடுகளுக் காக இச்சட்டத்தின் II ஆம் பாகத்தின் கீழ் பணிப்பாளர் தலைமையதிபதியினால் உரிமம் எதுவும் வழங்கப்படலாகாது.

(3) இலங்கை நீர்ப்பரப்புக்களில் மோட்டார் மயப் படுத்தப்பட்ட அல்லது இயந்திர மயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்பட்ட பாய்ச்சு பக்குரு வலைகளைப் பயன்படுத்தி நிறை வேற்றப்பட்ட மீன்பிடி செயற்பாடுகளுக்காக இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம் புதிப்பிக்கப்படுதலாகாது:

ஆயினும் பாய்ச்சு பக்குரு வலைகளைப் பயன் படுத்துவதற்காக ஏற்கனவே வழங்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முற்போந்த நாளன்று இன்னும் வலுவில் இருக்கின்றதுமான உரிமம் ஒன்று இச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் அதன்கண் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதிக்கு உரிமமானது எந்த நோக்கத்திற்காகவும் எந்நோக்கம் தொடர்பிலும் வழங்கப்பட்டதோ அந்நோக்கத்திற்காகவும் அந்நோக்கம் தொடர்பிலும் செல்லுபடியானதாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவானது அதன் (2அ) என்னும் உட்பிரிவினை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(2அஅ)இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற்றுக்கு இணங்கி ஒழுகத் தவறுகின்ற எவரேனும் ஆள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளித்ததன் மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற் றண்டனை ஒன்றுக்கு அல்லது ஐம்பதாயிரம் ரூபாவிற்குக் குறையாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவானது "இலங்கை நீர்ப்பரப்புகள்" என்னும் சொற்றொடரின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

" "பாய்ச்சு பக்குரு வலை" என்பது கூம்பு வடிவ அமைப்பைக் கொண்டதும் மற்றைய முனையுடன் தொடுக்கப்பட்ட இரண்டு சிறகுகளுடன் அல்லது சிறகுகள் இன்றி உச்சியுடன் தொடுக்கப்பட்டவை அல்லது மடி முறை ஒன்றைக் கொண்டுள்ளதும் அத்துடன் மோட்டார் மயப்படுத்தப்பட்ட அல்லது இயந்திரமயப்படுத்தப்பட்ட மீன்பிடி வள்ளங்களினால் கட்டி இழுக்கப்படுவதுமான கட்டி இழுக்கும் வலை எனப் பொருள்படும்.".

*இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவானது வேறு எழுத்திலான சட்டத்திலும் மேலோங்கி நிற்றல்.*

**5.** இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும் பயன்கொண்டதாதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க, இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கும் வேறு அத்தகைய சட்டத்திற்கும் இடையே ஏதேனும் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில்,

இச்சட்டத்தின் 28அ என்னும் பிரிவின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**6**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்